
Koviloor Digital Library

பிரார்த்தனைக் களஞ்சியம்



ACC. NO.
34054

நர்மதா பதிப்பகம்

Koviloor Digital Library

நமது கடவுள் பக்தி

மற்ற மத வழிபாட்டுத் தலங்களோடு இந்து கோயில்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது வருத்தமே உண்டாகிறது.

மற்ற மதங்களில் குருக்களாக இருக்கப்பட்டவர் வெறும் சடங்கு பண்ணி வைக்கிற சாமியாராக இருப்பதில்லை. ஒரு பாதிரியாரோ, மௌல்வியோ வெறும் மதபோதகராக மட்டுமில்லாமல் அம்மதத்தினர் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கம், நாணயம், பரஸ்பர நம்பிக்கை, கடமை இவைகள் பற்றி அறிவுறுத்துகிறார்.

மதம் என்பது ஞாயிற்றுக் கிழமைகளிலும் வெள்ளிக் கிழமைகளிலும் நினைக்கப் படவேண்டிய ஒன்று என்றில்லாமல் அன்றாடம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு வாழ்வு நெறி என்பதை வலியுறுத்துகிறார்கள். கேட்கின்ற மக்களும் மனத்தெளிவு பெற்று நல்வாழ்வு நடத்த முடிகின்றது.


இந்து கோவில்களில் நடப்பதென்ன?

குருக்கள் ஒரு வறுமைச் சித்திரமாக, தட்டில் விழும் நாணய ஓசைக்காக காத்திருக்கிறார். டிக்கட்டுக்கு அர்ச்சனை. அதிகம் புரியாத மொழியில் பூஜை. தேங்காய் உடைப்பு. கலப்பட கற்பூர ஆரத்தி. முடிந்தது, உலகிலேயே பழமையான வேத மதத்தின் ஆராதனை!

[தொடர்ச்சி பின் அட்டையில்]

Koviloor Digital Library

பிரார்த்தனைக் களஞ்சியம்



இந்து சமய மக்கள் தினசரி
பாராயணம் செய்யும் பொருட்டாக
வெளியிடப்பெற்றது.

நூல் அன்பளிப்பு



நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்.
தியாகராய நகர், சென்னை-600 017.

Koviloor Digital Library

பரம்பொருளிடம் வேண்டுதல்

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி,
அகத்திலே அன்பினோர் வெள்ளம்,

பொறிகளின் மீது தனியர சாணை,
பொழுதெல்லாம் நினதுபே ரருளின்

நெறியிலே நாட்டம், கரும யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை யருளாய்,

குறி குணமேதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே!

-மகாகவி பாரதியார்

Koviloor Digital Library

ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!

இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே,
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்

Koviloor Digital Library

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள்கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பதுவாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்து அறிவித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முகமாக இனிதெனக்கு அருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிது எனக்கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

Koviloor Digital Library

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என் செவியில்

எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழிக் காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக்கருத்தின் நிலையறிவித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!

○ ○ ○

Koviloor Digital Library

சிவமயம்

மணிவாசகப்பெருமான் அருளிய
சிவ புராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

Koviloor Digital Library

கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்ட
வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையோன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

Koviloor Digital Library

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்
தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியோனே*
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்
தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழு அழுக்குமூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

நணியோனே என்பது பாட பேதம்

Koviloor Digital Library

தாயிற்சிறந்த தயாஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
நேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்*
சோதியனே துன் இருளே தோன்றாய் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த் தன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்
தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற

அல்லையுமாய் என்பது பாடபேதம்

Koviloor Digital Library

தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணு
ணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
செல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து
சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப்பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம்
நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

கவசம்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்,
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்

Koviloor Digital Library

கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து,
வரவரவேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
சரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவ வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென

வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்

Koviloor Digital Library

சண்முகன் ரீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து,
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரிநூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென

டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு

Koviloor Digital Library

விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க

Koviloor Digital Library

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுது தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க

Koviloor Digital Library

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்

Koviloor Digital Library

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிட கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதி செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

Koviloor Digital Library

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை அருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தாகுகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

Koviloor Digital Library

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

Koviloor Digital Library

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்;
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்,
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்,
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்;
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்

Koviloor Digital Library

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி 230

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி! கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்! 238



மகாகவி பாரதியார் பாடல்கள்

ஆறு துணை

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்-பராசக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்.
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி-ஓம்சக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்.

கணபதி ராயன்-அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
குணமு யர்ந்திடவே-விடுதலை
கூடி மகிழ்ந்திடவே

Koviloor Digital Library


சொல்லுக் கடங்காவே -- பராசக்தி
சூரத் தனங்களெல்லாம்;
வல்லமை தந்திடுவாள் -- பராசக்தி
வாழியென் றேதுதிப் போம்.

வெற்றி வடிவேலன் -- அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்.
சுற்றிநில் லாதேபோ! -- பகையே
துள்ளி வருகுது வேல்.

தாமரைப் பூவினிலே -- சுருதியை
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே -- கண்ணிலொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம்.

செல்வத் திருமகளைத் -- திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்.
செல்வமெல் லாந்தருவாள் -- நமதொளி
திக்கனைத் தும்பரவும்.


(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)



கேட்பன


எண்ணிய முடிதல் வேண்டும்;
    நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்;
    தெளிந்த நல்லறிவு வேண்டும்;

பண்ணிய பாவ மெல்லாம்
    பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
    நசித்திடல் வேண்டும் அன்னாய்.



Koviloor Digital Library

யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே,
வேதச் சுடரே, மெய்யாங் கடவுளே,
அபயம் அபயம் அபயம் நான் கேட்டேன்
நோவு வேண்டேன், அமைதி வேண்டினேன்;
அச்சம் வேண்டேன்; அமைதி வேண்டினேன்;
உடைமை வேண்டேன்; உன்துணை வேண்டினேன்;
வேண்டா தனைத்தையும் நீக்கி
வேண்டிய தனைத்தும் அருள்வதுன் கடனே.



உலகத்து நாயகி

உலகத்து நாயகியே -- எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
உன்பாதம் சரண்புகுந்தோம் -- எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!


கலகத் தரக்கர் பலர் -- எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார், எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
பலகற்றும் பலகேட்டும் -- எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
பயனொன்று மில்லையடி -- எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
நிலையெங்கும் காணவில்லை -- எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
நின்பாதம் சரண்புகுந்தோம் -- எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!



Koviloor Digital Library

முருகா, வருவாய்! தருவாய்!

முருகா — முருகா — முருகா
வருவாய் மயில்மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும்.
சுருதிப் பொருளே, வருக!
துணிவே, கனலே வருக!
கருதிக் கருதிக் கவலைப்படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல்
அறி வாகியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய்
குருவே! பரமன் மகனே!
குகையில் வளரும் கனலே!
தருவாய் தொழிலும் பயனும், அமரர்
ஸமரா திபனே, சரணம் சரணம்!



லக்ஷ்மி தேவி - சரண்புகுதல்

மாதவன் சக்தியினைச் — செய்ய
மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்
போதுமிவ் வறுமையெலாம் - எந்தப்
போதிலுஞ் சிறுமையின் புகைதனிலே
வேதனைப் படுமனமும் — உயர்
வேதமும் வெறுப்புறச் சோர்மதியும்
வாதனை பொறுக்கவில்லை — அன்னை
மாமக ளடியினை சரண் புகுவோம்.


Koviloor Digital Library

பொன்னிலும் மணிகளிலும் — நறும்
பூவிலும் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப்பினிலும் — செழுங்
காட்டிலும் பொழிலிலும் — கழனியிலும்
முன்னிய துணிவினிலும் — மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்
பன்னிநற் புகழ்பாடி — அவள்
பதமலர் வாழ்த்திநற் பதம்பெறுவோம்.



கண்ணன் திருவடி

கண்ணன் திருவடி எண்ணுக மனமே
திண்ணம் அழியா வண்ணந் தருமே.
தருமே நிதியும் பெருமை புகழும்
கருமா மேனிப் பெருமா னிங்கே.
இங்கே அமரர் சங்கந் தோன்றும்
மங்கும் தீமை பொங்கும் நலமே.
நலமே நாடிற் புலவீர் பாடீர்
நிலமா மகளின் தலைவன் புகழே.
புகழ்வீர் கண்ணன் தகைசே ரமரர்
தொகையோ டசுரப் பகைதீர்ப் பதையே.
தீர்ப்பான் இருளைப் பேர்ப்பான் கலியை
ஆர்ப்பா ரமரர் பார்ப்பார் தவமே.
தவறா துணர்வீர் புவியீர் மாலும்
சிவனும் வானோர் எவரும் ஒன்றே.
ஒன்றே பலவாய் நின்றோர் சக்தி
என்றுந் திகழும் குன்றா வொளியே.




Koviloor Digital Library


வாணியை வேண்டுதல்

ஸரஸ்வதி துதி

வாணிகலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங்
காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.



தெளிவுறவே யறிந்திடுதல்
தெளிவுதர மொழிந்திடுதல்; சிந்திப் பார்க்கே
களிவளர யுள்ளத்தி லாநந்தக் கனவுபல
காட்டல் கண்ணீர்த்
துளிவரஉள் ளுருக்குதல்இங் கிவையெல்லா
நீயருளுந் தொழில்க ளன்றோ?
ஒளிவளருந் தமிழ்வாணி, அடியேனற்கு
இவையனைத்தும் உதவு வாயே!



அக்கினி பகவான்

ஆவியி னுள்ளும் அறிவி னிடையிலும்
அன்பை வளர்த்திடுவோம் -- விண்ணின்
ஆசை வளர்த்திடுவோம் -- களி
ஆவல் வளர்த்திடுவோம் -- ஒரு
தேவி மகனைத் திறமைக் கடவுளைச்
செங்கதிர் வானவனை -- விண்ணோர்தமைத்
தேனுக் கழைப்பவனைப் -- பெருந்திரள்
சேர்ந்து பணிந்திடுவோம் -- வாரீர்.
நெஞ்சிற் கவலைகள் நோவுகள் யாவையும்
நீக்கிக் கொடுப்பவனை -- உயிர்
நீளத்தருபவனை -- ஒளிர்

Koviloor Digital Library

நேர்மைப் பெருங்கனலை — நித்தம்
அஞ்சலஞ் சேல்என்று கூறி எமக்குநல்
ஆண்மை சமைப்பவனைப் — பல்வெற்றிகள்
ஆக்கிக் கொடுப்பவனைப் — பெருந்திரள்
ஆகிப் பணிந்திடுவோம் - வாரீர்.



போற்றி அகவல்

போற்றி உலகொரு மூன்றையும் புணர்ப்பாய்!
மாற்றுவாய், துடைப்பாய், வளர்ப்பாய், காப்பாய்!
கனியிலே சுவையும், காற்றிலே இயக்கமும்
கலந்தாற் போலநீ அனைத்திலும் கலந்தாய்!
உலகெலாந் தானாய் ஒளிர்வாய், போற்றி!
அன்னை, போற்றி! அமுதமே, போற்றி!
புதியதிற் புதுமையாய், முதியதில் முதுமையாய்,
உயிரிலே உயிராய், இறப்பிலும் உயிராய்,
உண்டெனும் பொருளில் உண்மையாய், என்னுள்ளே


நானெனும் பொருளாய், நானையே பெருக்கித்
தானென மாற்றும் சாகாச் சுடராய்,
கவலை நோய் தீர்க்கும் மருந்தின் கடலாய்
பிணியிருள் கெடுக்கும் பேரொளி ஞாயிறாய்,
யானென தின்றி யிருக்குநல் யோகியர்
ஞானமா மகுட நடுத்திகழ் மணியாய்
செய்கையாய், ஊக்கமாய், சித்தமாய், அறிவாய்
நின்றிடும் தாயே, நித்தமும் போற்றி!
சக்தி, போற்றி! தாயே, போற்றி!



Koviloor Digital Library

இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்த திருவருட்பா பாடல்கள்

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
 உத்தமர்தம் உறவுவேண்டும்
 உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
 உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
 பேசா திருக்கவேண்டும்
 பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
 பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
 மறவா திருக்கவேண்டும்
 மதிவேண்டும் நின்கருணைநிதிவேண்டும் நோயற்ற
 வாழ்வில்நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
 தலம்ஓங்கு கந்தவேளே!
 தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
 சண்முகத் தெய்வமணியே!



நான் மறவேனே...

அட்ட மூர்த்தம தாகிய பொருளை
 அண்டர் ஆதியோர் அறிகிலாத் திறத்தை
விட்ட வேட்கையர்க் கங்கையில் கனியை
 வேத மூலத்தை வித்தக விளைவை
எட்ட ரும்பர மானந்த நிறைவை
 எங்கும் ஆகிநின் றிலங்கிய ஒளியை
நட்டம் ஆடிய நடனநா யகத்தை
 நமச்சி வாயத்தை நான்மற வேனே

Koviloor Digital Library

பெற்ற தாய்தனை மகவுமறந் தாலும்
பிள்ளை யைப்பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரைமேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகம் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கு
நமச்சி வாயத்தை நான்மற வேனே!



அன்புருவான சிவமே


அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படும்பரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறவே
அன்பெனும் அணுவுள் ளமைந்தபேர் ஒளியே
அன்புரு வாம்பர சிவமே.
சாதியும்மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்
நீதியும் நிலையும் சத்தியும் பொருளும்
நித்திய வாழ்க்கையும் சுகமும்
ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா
அருட்பெருஞ் சோதிஎன் றறிந்தேன்
ஓதிய அனைத்தும் நீஅறிந் ததுதான்
உரைப்பதென் அடிக்கடி உனக்கே.



Koviloor Digital Library

வாழி நின் மாண்பே

அப்பனே அப்பா அம்மையே அரசே
அருட் பெருஞ்சோதியே அடியேன்
துன்பெலாம் தொலைத்த துணைவனே ஞான
சுகத்திலே தோற்றிய சுகமே
இன்பனே எல்லாம் வல்லசித் தாகி
என்னுளே இலங்கிய பொருளே
வன்பனேன் பிழைகள் பொறுத்தருட் சோதி
வழங்கினை வாழிநின் மாண்பே.
பெருகுமா கருணைப் பெருங்கடல் இன்பப்
பெருக்கமே என்பெரும் பேறே
உருகும்ஓர் உள்ளத் துவட்டுறா தினிக்கும்
உண்மைவான் அமுதமே என்பால்
கருகும்நெஞ் சதனைத் தளிர்த்திடப் புரிந்த
கருணையங் கடவுளே விரைந்து
வருகஎன் றுரைத்தேன் வந்தருட் சோதி
வழங்கினை வாழிநின் மாண்பே.



வேண்டுகோள்

அப்பா நான் வேண்டுதல்கேட்
டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான்
அன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்
நான் சென்றே
எந்தைநின தருட்புகழை
இயம்பிடல் வேண்டும்

Koviloor Digital Library

செப்பாத மேனிலைமேல்
　　சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி
　　செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீ
　　பொறுத்தல் வேண்டும்
தலைவ நினைப் பிரியாத
　　நிலைமையும் வேண்டுவனே!



ஆன்ம நேய ஒருமைப்பாடு

எவ்வுயிரும் பொது எனக்கண் டிரங்கி உப
　　சரிக்கின்றார் யாவர் அந்தச்
செவ்வியர்தம் செயல் அனைத்தும் திருவருளின்
　　செயல் எனவே தெரிந்தேன் இங்கே
கவ்வை இலாத் திருநெறிஅத் திருவாளர்
　　தமக்கேவல் களிப்பால் செய்ய
ஒவ்வியதென் கருத்தவர்சேர் ஓதிடஎன்
　　வாய்மிகவும் ஊர்வ தாலோ.

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
　　தம் உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
　　யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம் பெருமான் நடம்புரியும்
　　இடம்என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என
　　சிந்தைமிக விழைந்த தாலோ!




Koviloor Digital Library

அம்பாள் வணக்கம்

கண்ணே! யக் கண்ணின் கருமணி!
மணியில் கலந்தொளிசெய்
விண்ணே! வியனொற்றி யூரண்ணல்
வாமத்தில் வீற்றிருக்கும்
பெண்ணே! மலைபெறும் பெண்மணி
யே! தெய்வப் பெண்ணமுதே!
மண்ணேய நீத்தவர் வாழ்வே
வடிவுடை மாணிக்கமே!

வாழி! நின்சேவடி போற்றி! நின்
பூம்பத வாரி சங்கள்
வாழி! நின்றாள்மலர் போற்றி! நின்
தண்ணளி வாழி! நின்சீர்
வாழி!யென் னுள்ளத்தில் நீயுநின்
யெனாற்றி மகிழ்தரு நீ
வாழி! யென் னாருயிர் வாழ்வே
வடிவுடை. மாணிக்கமே!




போற்றி! போற்றி!

போற்றி நின் அருள் போற்றி நின் பொது
போற்றி நின்புகழ் போற்றிநின் உரு
போற்றி நின்இயல் போற்றி நின்நிலை
போற்றி நின் நெறி போற்றி நின்சுகம்
போற்றி நின்உளம் போற்றி நின்மொழி
போற்றி நின்செயல் போற்றி நின்குணம்
போற்றி நின்முடி போற்றி நின்நடு
போற்றி நின்அடி போற்றி போற்றியே!

Koviloor Digital Library

போற்றி நின்இடம் போற்றி நின்வலம்
போற்றி நின்நடம் போற்றி நின்நலம்
போற்றி நின்திறம் போற்றி நின்தரம்
போற்றி நின்வரம் போற்றி நின்கதி
போற்றி நின்கலை போற்றி நின்பொருள்
போற்றி நின்ஒளிபோற்றி நின்வெளி
போற்றி நின்தயை போற்றி நின்கொடை
போற்றி நின்பதம் போற்றி போற்றியே!




அபிராமிபட்டரின் அபிராமியம்மைப் பதிகம்

கலையாத கல்வியும், குறையாத வயதும், ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும், குன்றாத இளமையும்,
கழுபிணி இலாத உடலும்

சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும்,
தடைகள் வாராத கொடையும்,

தொலையாத நிதியமும், கோணாத கோலும், ஒரு
துன்பம் இல்லாத வாழ்வும்
துய்யநின்பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்

அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!



Koviloor Digital Library


திருப்புகழ்

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநத வெகுகோடி

நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்

சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர தம்பரம வீரா நமோநம கிரிராஜ


தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவகுஞ்சரி பாகா நமோநம அருள் தாராய்



கந்தரலங்காரம்

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மன மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்தலை மேலயன் கையெழுத்தே.

விழிக்குத்துணைத்திரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிருதோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.



Koviloor Digital Library

ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிர திவ்வியப் பிரபந்த பாசுரங்கள்

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து,
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள
பூங்குவளைப்போதில் பொறிவண்டுகண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்க, குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

—திருப்பாவை



திரு மாலை


காவலிற் புலனை வைத்துக்
கலிதனைக் கடக்கப் பாய்ந்து,
நாவலிட் டுழிதரு கின்றோம்
நமன்தமர் தலைகள் மீதே!
மூவுல குண்டு மிழ்ந்த
முதல்வ! நின் நாமம் கற்ற,
ஆவலிப் புடைமை கண்டாய்
அரங்கமா நகரு ளானே!

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமர ரேறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்,
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோக மாளும்

Koviloor Digital Library

அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே!
குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை யிலங்கை நோக்கி,

கடல்நிறக் கடவு ளெந்தை
அரவணைத் துயிலு மாகண்டு,
உடலெனக் குருகு மாலோ
என்செய்கே னுலகத் தீரே!
ஊரிலேன் காணி யில்லை
உறவுமற் றொருவரில்லை,
பாரில் நின் பாத மூலம்
பற்றினேன் பரம மூர்த்தி
காரொளி வண்ண னே! ஓ
கண்ணனே! கதறு கின்றேன்,
ஆருளர் களைகணம்மா!
அரங்கமா நகரு ளானே!



பெரிய திருமொழி

குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
படுந்துய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்.
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்,
நலந்தருஞ் சொல்லை நான்கண்டுகொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்.

மஞ்சுலாஞ் சோலை வண்டறை மாநீர்
மங்கையார் வாள்கலி கன்றி,

Koviloor Digital Library

செஞ்சொலா லெடுத்த தெய்வநன் மாலை
இவை கொண்டு சிக்கெனத் தொண்டீர்,
துஞ்சும்போ தழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்,
நஞ்சுதான் கண்டீர் நம்முடைய வினைக்கு
நாராய ணாவென்னும் நாமம்.




திருவாய் மொழி

உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்,
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்,
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்,
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே!

அவரவர் தம தம தறிவறி வகைவகை,
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்,
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்,
அவரவர் விதிவழி யடையநின் றனரே.

நின்றன ரிருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்,
நின்றில ரிருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்,
என்றுமொ ரியல்வினர் எனநினை வரியவர்,
என்றுமொ ரியல்வொடு நின்றவெந் திடரே.




பொலிக!

பொலிக பொலிக பொலிக!
போயிற்று வல்லுயிர் சாபம்,
நலியும் நரகமும் நைந்த
நமனுக்கிங் கியா தொன்று மில்லை,
கலியும் கெடும்கண்டு கொள்மின்
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்,
மலியப் புகுந்திசை பாடி
யாடியுழிதரக் கண்டோம்.
கண்டோம் கண்டோம் கண்டோம்
கண்ணுக்கினியன கண்டோம்,


Koviloor Digital Library

தொண்டீர்! எல்லீரும் வாரீர்
தொழுது தொழுதுநின் றார்த்தும்,
வண்டார் தண்ணந்து மூாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்,
பண்டான் பாடிநின் றாடிப்
பரந்து திரிகின் றனவே.



நெடுமாற்கடிமை

நெடுமாற் கடிமை செய்வேன்போல்
அவனைக் கருத வஞ்சித்து,
தடுமாற் றற்ற தீக்கதிகள்
முற்றும் தவிர்ந்த சதிர்நினைந்தால்,
கொடுமா வினையேன் அவனடியார்
அடியே கூடும் இதுவல்லால்,
விடுமா றென்ப தென்னந்தோ!
வியன்மூ வுலகு பெறினுமோ?
தானே தானே யானாலும்
புயல்மே கம்போல் திருமேனி
அம்மான் புனைபூங் கழலடிக்கீழ்,
சயமே யடிமை தலைநின்றார்
திருத்தாள் வணங்கி, இம்மையே
பயனே யின்பம் யான்பெற்ற
துறுமோ பாவி யேனுக்கே?




கண்ணன் கழலிணை

கண்ணன் கழலிணை, -நண்ணும்மனமுடையீர்,
எண்ணும் திருநாமம், -திண்ணம் நாரணமே.
நாரண னெம்மான், -பாரணங்காளன்,
வாரணம் தொலைத்த, -காரணன் தானே,

Koviloor Digital Library

தானே யுலகெலாம், -தானே படைத்திடந்து
தானே யுண்டுமிந்து, -தானே யாள்வானே.
ஆள்வா னாழி நீர், -கோள்வா யரவணையான்,
தாள்வாய் மலரிட்டு, -நாள்வாய் நாடீரே.
நாடீர் நாடோறும், -வாடாமலர் கொண்டு,
பாடீர் அவன் நாமம், -வீடே பெறலாமே,
மேயான் வேங்கடம், -காயா மலர் வண்ணன்
பேயார் முலையுண்ட, -வாயான் மாதவனே,
மாதவ னென்று, -ஓத வல்லீரேல்,
தீதொன் றுமடையா, -ஏதம் சாராவே.
சாரா ஏதங்கள், -நீரார் முகில் வண்ணன்
பேரா ரோதுவார், ஆரார் அமரரே.



செஞ்சொற்கவிகாள்!

திருமா லிருஞ்சோ லைமலையே
திருப்பாற் கடலே என்தலையே
திருமால் வைகுந் தமேதண்
திருவேங் கடமே எனதுடலே,
அருமா மாயத் தெனதுயிரே
மனமே வாக்கே கருமமே,
ஒருமா நொடியும் பிரியானென்

ஊழி முதல்வன் ஒருவனே
என்னும் ஒருவன் உலகெல்லாம்,
ஊழி தோறும் தன்னுள்ளே
படைத்துக் காத்துக் கெடுத்துழலும்,
ஆழி வண்ணன் என்னம்மான்
அந்தண் திருமா லிருஞ்சோலை,
வாழி மனமே! கைவிடேல்
உடலும் உயிரும் மங்கவொட்டே.



Koviloor Digital Library

40

வேண்டுவன

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கினபொருள் கைப்படவேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்
காரியத்தில் உறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்க வேண்டும்
மண் விளைந்திட வேண்டும்
வானகமிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்
ஓம் ஓம் ஓம் ஓம்

-மகாகவி பாரதியார்.

○○

Koviloor Digital Library

குருக்கள் பக்தர்களுக்கு அறிவுரையோ, வாழ்வு நெறியோ சொல்லும் நிலையில் இல்லை; பக்தர்கள் கடவுளரிடம் வைக்கும் கோரிக்கைகள் – பேரங்கள் – மத்தியில் அறவாழ்வு பற்றி யோசிப்பதுமில்லை. விளைவு – நமது வாழ்க்கை இயக்கத்தில் கடவுள் தன்மை இல்லாமலாகிவிட்டது. பொய், பேராசை, வன்முறை, லஞ்சம், சமூக பொறுப்பின்மை பெருகிக் கொண்டேயிருக்கிறது. காரணம் பக்தி – வாழ்வின் நடைமுறைக்கு வரவில்லை. அகன்ற கோயில் பிரகாரங்களிலேயே நமது நல்ல தன்மைகளை விட்டுவிட்டு, வெளியே நாம் சுயநல பிராணிகளாகி விடுகிறோம்.

மதம் சொல்லும் நல்ல பண்புகளை கூடிய வரை கடைப்பிடிக்கும் ஒரு நல்ல முஸ்லீமைப் போல, ஒரு கிறிஸ்தவரைப் போல நாம் எப்போது மாறப் போகிறோம்? அப்படி மாறாவிட்டால் 80 சதவீதம் இந்துக்களே உள்ள இந்தியாவின் வருங்காலம் எப்படி இருக்கும்?

ஒரு சமூகத்தின் அறக்காவலர்கள் மத குருக்கள். சமூக நீதி காவலர்கள் காவல் துறையினர். வருங்கால சந்ததியின் அறிவு காவலர்கள் ஆசிரியர்கள். இந்த மூன்று பிரிவினரும் சரியாக இருந்தால் அந்த சமூகம் நெறியாக இருக்கும். அதற்கு இந்த பிரிவினரை வாடவிடாமல், தங்களது கடமைகளை எந்நிலையிலும் பாரபட்ச மின்றி சரியாக நிறைவேற்றும் பலத்தோடு எந்த சமூகம் காப்பாற்றுகிறதோ, மதிக்கிறதோ – அது தன் எதிர் காலத்தை காப்பாற்றிக் கொள்கிறது!

Koviloor Digital Library

பிரார்த்தனைக் களஞ்சியம்

